சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 57/2018

பெயர். திரு.பாலசுப்பிரமணியன் நாள். 20.04.2026
த/பெ. பாஸ்கர்

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.1.** என்னுடைய வெளியேற்று குறிப்புரை **ம.த.சா.ஆ.2**. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் நகல்கள் **ம.த.சா.ஆ.3 மற்றும் 4.** என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள் **ம.த.சா.ஆ.5 மற்றும் 6.** என்னுடைய ஏற்பட்ட மருத்துவ செலவீனங்களுக்கான ரசீதுகள் **ம.த.சா.ஆ.7.** என்னுடைய ஓட்டுநர் உரிமம் நகல் **ம.த.சா.ஆ.8** (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

**ம.த.சா.ஆ.8** ஐ வைத்து என்னுடைய தொழில் மற்றும் வருமானத்தை என்பிக்க இயலாது என்றால் சரியல்ல. மனு விபத்து சம்பந்தமாக நான் தான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். நான் என் இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி பயணம் செய்தேன் என்றால் சரிதான். நான் குறிப்பிடும் லாரி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றது என்றால் சரிதான். கீறல்வாடியில் சாலையின் வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் பேருந்து நிறுத்தம் உள்ளது என்று

சொன்னால் சரிதான். நான் குறிப்பிடும் சம்பவ இடம் மேற்கண்ட எந்த பேருந்து நிறுத்தத்தில் நடந்தது என்றால் சாலையின் நடுவில் ஏற்பட்டது. நான் எவ்வளவு தூரத்தில் லாரியை பார்த்தேன் என்றால் 10 அடி தூரத்தில் பார்த்தேன். நான் செல்லும் திசையில் எனக்கு முன்னும் பின்னும் இணையாகவும் வாகனங்கள் வரவில்லை. இரவு 2.45 மணியளவில் பவுஞ்சூர் சென்றடைந்து விடியற்காலை 4.30 மணியளவில் அங்கிருந்து கிளம்பி வந்தேன். காலதாமதமாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் இரவு முழுவதும் இருசக்கர வாகனத்தை ஓட்டியதால் தூக்க கலகத்தால் விபத்தை ஏற்படுத்திகொண்டேன் என்றால் சரியல்ல. லாரி ஓட்டுநர் மீது எவ்வித தவறும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு முகம் மற்றும் தலையில் காயம் ஏற்பட்டது. நான் அன்று தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. குற்ற வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கைபடி, லாரிக்கு எந்த சேதாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள நஷ்ட ஈடு எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.